பக்கங்கள் –12
விலை – ரூபா 50




Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 150

வெள்ளிக்கிழமை
25 ஏப்ரல் 2025

சித்திரை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

# தேசிய மக்கள் சக்தியே பெரும் தமிழ்க்கட்சியாம்

வவுனியா, ஏப்ரல் 25

தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்குமாறு இன்று சொல்கின்றனர். இன்று இலங்கையில் உள்ள மிகப்பெரும் தமிழ்க்கட்சி என்றால் அது தேசிய மக்கள் சக்தியே என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

☞ 11

## செம்மணிப் படுகொலைக்கு விரைவில் நினைவுமுற்றம்!

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த பேரவலங்களை, எதிர்காலச் சந்ததியினருக்குக் கடத்தும் வகையில் செம்மணிப் படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படும். அத்துடன், தமிழின வரலாற்றுடன் தொடர்

☞ 11

எல்லா அரசாங்கத்திலும் அமைச்சர்

## டக்ளஸ் தேவானந்தா தொடர்பில் சகல விடயமும் விசாரிக்கப்படும்!

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



வவுனியா, ஏப்ரல் 25

'ஷொப்பிங் பையுடன்' புத்தளத்துக்கு வந்தவர்கள் இன்று பத்துக் கப்பல்களை வாங்கும் நிலைக்கு வந்துள்ளனர். டக்ளஸ் தேவானந்தா அனைத்து அரசாங்கத்திலும் அமைச்சராக இருந்தார். நாங்கள்

☞ 11

## வடமாகாணத்தை நாங்கள் அன்புடன் பாதுகாப்போம்!

உருகுகின்றது அநுர அரசு

வவுனியா, ஏப். 25

காணாமல் ஆக்கப்பட்ட ஒருமகன் மீண்டும் கிடைத்ததைப் போன்றுதான் வடமாகாணம் எமக்குக் கிடைத்துள்ளது. அதனை நாங்கள் அன்போடு பாதுகாப்போம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்

☞ 11

## டான் பிரியசாத் படுகொலை பிரதான சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 25

டான்பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டியவில் வைத்து கடந்த 22ஆம்

☞ 11

## மருத்துவரிடம் திருட்டு பொலிஸ் விசாரணை!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவரின் உடைமையில் இருந்த ஆயிரம் 'பிராங்க்' திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்

☞ 11



பாப்பரசரின் மறைவுக்காக

## இலங்கையில் நாளை தேசியத் துக்கதினம்!

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் நாளை சனிக்கிழமை தேசியத் துக்கதினமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான, பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்குகள்

☞ 11

மகளிர் இல்லமொன்றில்

## தவறான முடிவெடுத்து யுவதியொருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் உள்ள மகளிர் இல்லமொன்றில் வசித்துவந்த யுவதியொருவர் (வயது - 21) தவறான முடிவெடுத்து நேற்று

☞ 11

## ஹைஏஸில் தவறில்லை ஓட்டோவே மோதியது!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். வேலணை மண்கும்பான் பகுதியில் ஹைஏஸ் வாகனத்துடன் ஓட்டோவொன்றுமோதிவிபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்.நோக்கிப் பயணித்த

☞ 11





'நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கிறது கண்டியளோ'

## நிமோனியாவால் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25

நிமோனியா காய்ச்சல் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி - தம்பாலை

☞ 11

விசேட குற்ற விசாரணைப்பிரிவின்

## பொலிஸ் அதிகாரிக்கு எதிராக பெண்ணொருவர் குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு எதிராக, பெண்ணொருவர் இலஞ்சம் மற்றும் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளை

☞ 11

## வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த பொலிஸ் அலுவலர் மறியலில்!

திங்களன்று அடையாள அணிவகுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

வீடொன்றில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர் ஒருவர், நீதிமன்ற அறிவுறுத்தலுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும்

☞ 11

பகல்ஹாம் தாக்குதலின் எதிரொலி

## இந்தியா - பாகிஸ்தான் இடையே உச்சம் பெற்றது போர்ப் பதற்றம்!

விரிவு பக்கம் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4053 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 17 22 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1120 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 20 37 46 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 079 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 2 4 1 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2159 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 10 15 49 77 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5811 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 5 3 9 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1841 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 21 22 63 77 |
| விசேட எழுத்து | D |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0386 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 5 3 9 7 |

# தமிழர்கள் சொந்தக்காலில் நிற்பதற்கான ஊழலற்ற நிர்வாகத்தை உருவாக்குவோம்

## க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு


**யாழ்ப்பாணம், ஏப்.25**

**போர்க்காலத்தின் பின்னர் மற்றவர்களை நம்பி, மற்றவர்களின் கொடையை நம்பி வாழும் மக்களின் இந்த நிலைமை மாறவேண்டும். எமக்கென்று பிரத்தியேகமான அரசியல், சமூக, பொருளாதார எதிர்பார்ப்புகள் உள்ளன. அதனை நிறைவேற்ற ஊழலற்ற நிர்வாகத்தை உள்ளூராட்சி மன்றங்களில் உருவாக்குவோம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர்களை அடையாளம் காணும் கூட்டம் கொக்குவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மே மாதம் 6ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறப் போகின்றன. பல சிக்கல்களின் மத்தியில்தான் எமது கட்சி இம்முறை உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்கேற்கிறது.

எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை முக்கியமாக உணவுவகைகளை நாமே உருவாக்கவேண்டும். ஊழலற்ற நிர்வாகத்தை உள்ளூராட்சி மன்றங்களில் உருவாக்குவோம். அதற்கு மக்களின் ஆதரவு எமக்குக் கிடைக்கவேண்டும். தேர்தல்முடிந்தவுடன்தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முயல்வோம். தமக்கு வாக்களித்தால் மட்டுமே நிதிவசதிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்கும் என்கின்ற ஆளும் தரப்பினரிடம் நாம் மண்டியிடக்கூடாது - என்றார். (ச-33-125)



# மக்களைப் பாதிக்காத அபிவிருத்தியே தேவை

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 25

மன்னாரில் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது நன்மை தரக்கூடிய அபிவிருத்தித்திட்டங்களை இந்திய அரசாங்கம் ஆதரித்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விடத்தல் தீவுக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்றம் ஒரு சிறிய அரசாங்கம். அதன் பணி வீதி அமைப்பது,தெருவுக்கு மின்விளக்குப் போடுதல் மாத்திரமே என்று நினைக்க வேண்டாம். இந்த உள்ளூராட்சிசபைகள் ஊடாகவே பல்வேறு சட்டங்களையும், பிரதேசங்களுக்கான வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தமுடியும். எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுகின்ற சட்டவிரோத மணலகழ்வை நாங்கள் எமது சபைகள் ஊடாகத் தடைசெய்யமுடியும். மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விடத்தல் தீவுப் பகுதியில் சுற்றுலாத்துறையையும் அபிவிருத்தி செய்யமுடியும்.

இந்தியாவுடன் கூடுதல் நெருக்கத்துடன் நாங்கள் இருக்கிறோம். இந்திய அரசு மன்னாரில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது.

உதாரணமாக இராமேஸ்வரம், தலைமன்னார் கப்பல் சேவை மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே இவ்வாறான நல்ல விடயங்களுக்கு நாங்கள் இந்தியாவுடன் இணைந்து எமது பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்துகொள்ளமுடியும் - என்றார். (ச-56)

# வாழ்த்துச்செய்திக்கு கட்டணம் இல்லை!

## ரணில் அலுவலகம் விளக்கம்

கொழும்பு, ஏப்.25

கடந்தகாலங்களில் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியை குறுஞ்செய்தியாக அனுப்புவதற்கு 98 இலட்சம் ரூபா செலவிடப்பட்டது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டகச்சி தெரிவித்த கருத்துக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துச்செய்தியைக் குறுஞ்செய்தியாக அனுப்புவதற்கு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் எதுவித கட்டணமும் அற விடுவதில்லை என்றும், இந்தச் சேவை இலவசமாகவே வழங்கப்படுகின்றது என்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகஉத்தியோகத்தர் டினோக் கமகே தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள்ளார். இவர் ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு சேவை அதிகாரியாவார். (எ-6)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0519 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 3 6 5 2 4 5 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2785 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 13 20 51 78 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 21 22 32 58 |
| வெற்றி வாரம் | 4946 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0668 |
| வெற்றி இலக்கம் | 06 17 24 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| துலாம் | |
| வெற்றி இலக்கம் | 38 48 50 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4497 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கம் | 17 36 38 51 |
| வெற்றி வாரம் | 1961 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 24.04.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 42 46 55 76 |
| வெற்றி வாரம் | 2611 |



# தொடர் கொலைகளால் மக்கள் கடும் அச்சத்தில்

## ரிசாத் பதியுதீன் தெரிவிபபு

வவுனியா, ஏப்.25

நாட்டில் தொடர்ச்சியாக நடக்கும் கொலைகள் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய அரசாங்கம் வந்தபின்னர் அடிக்கடி கொலைகள், பாதாள உலக குழுக்களின் கொலைகள் நடக்கின்றன. தொடர்ச்சியான கொலைகள் மக்களை அச்சம் கொள்ளும் நிலைக்கு உருவாக்குகின்றன. தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருக்கும்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகப் பேசினார்கள். ஆனால் இப்போது போஸ்டர் ஒட்டுதல், பேஸ்புக்கில் பதிவுகள் இடுதல் என்பவற்றுக்கு எதிராக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் - என்றார். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபை புதிய கட்டடத்தின் கட்டுமானம் நவம்பரில் நிறைவு

## நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.25

**யாழ்ப்பாணம் மாநகரசபைக்கான புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை எதிர்வரும் நவம்பர் மாதமளவில் நிறைவுறுத்தவேண்டும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.**

இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாவுக்கான கட்டுமானப்பணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை விரைவாக மேற்கொண்டு வருகின்றது. நகர அபிவிருத்திசார் அமைச்சர் இன்று இந்தக் கட்டடத்தின் கட்டுமானப்பணிகளை நேரில்சென்று பார்வையிடவுள்ளார். 2020ஆம் ஆண்டு இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இரண்டரை ஆண்டுகளில் கட்டுமானப் பணிகள் நிறைவுறும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக அமைச்சின் அனுமதியுடன் இந்தப்பணிகள் பிற்போடப்பட்டிருந்தன.

18 ஆயிரம் சதுரக்கிலோமீற்றர் பரப்பளவில் அமைக்கப்படும் இந்தக் கட்டடத்தின் 82 சதவீதமான கட்டுமானம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்காக 2 ஆயிரத்து 142 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளநிலையில், இதுவரையில் ஆயிரத்து 992 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்ட 600 மில்லியன் ரூபா முழுமையாகச் செலவிடப்பட்டுள்ளது. கட்டடத்தின் முதல்தளக் கட்டுமானப் பணிகள் நிறைவுற்றுள்ளபோதும், மாநகரசபையின் 27 கிளைகளில் 3 கிளைகளை மட்டுமே அந்தத் தளத்தில் இயக்க முடியும் என்று மாநகரபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.(ஏ-125)



# முன்னாள் அமைச்சர்களுக்கெதிராக குவியும் ஊழல் முறைப்பாடுகள்!

கொழும்பு, ஏப். 25

முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக 15 ஊழல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவென இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் ரங்க திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு எதிராக மொத்தம் 300 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் 15 முறைப்பாடுகள் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிரானவை. இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

# கிளிநொச்சியில் ஹெரோய்னுடன் இளைஞன் கைது

கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் கட்டைக்காட்டுப் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைதானார். சந்தேகநபரிடமிருந்து 5கிராம் 700 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது 14 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-28)

# டயானா வழக்கு ஒத்திவைப்பு

டயானா கமகேவுக்கு எதிரான வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. செல்லுபடியான விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்ததாக தெரிவித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் 7 குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# தமிழ்ப்பெண் கொலை குற்றவாளிக்கு மரணதண்டனை

கொழும்பு, ஏப்.25

கொழும்பில் தமிழ்ப் பெண் ஒருவரை கொலைசெய்தவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது. 2015ஆம் ஆண்டு கொழும்பின் செட்டித் தெருவிலுள்ள விடுதியில் பெண் ஒருவர் கொலைசெய்யப்பட்டார். அவரது உடலை ஒரு சூட்கேஸில் அடைத்து வீதியில் உள்ள பேருந்து நிலையத்தில் வீசிய வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கே கொழும்பு உயர்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. (ச-இ)

# எழுதுமட்டுவாழில் கஞ்சாப்பொதி மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

கிளாலி எழுதுமட்டுவாழ் மாணிக்கவாசகர் கோவிலுக்கு அருகாமையில் ஐந்து கிலோ நிறையுடைய கஞ்சாப் பொதிகள் நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி பத்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமென தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-159)






வேலியை வைச்சே காணியைப் பிடிக்கிற வித்தை யாழ்ப்பாணத்தாருக்கு அத்துப்படி. இந்தப் பரம்பரைப் பழக்கம் இப்பவும் நடந்துகொண்டுதான் இருக்குது. வலிகாமம் தெற்குப் பகுதியில இருக் கிற, தோட்டத்துக்குப் பேர்போன ஊரில நாலைஞ்சு வீடுகளுக்குப் போய்வரக்கூடிய ஒழுங்கையொண்டு இருக்குது. அது பொதுப்பாதை எண்டு அந்தந்தக் காணி உறுதியளிலையும் வடிவா எழுதியிருக்கு. இது பொதுப்பாதை எண்டதால, கம்பரெலியத் திட்டத்தில அந்த ஒழுங்கைக்கு தார் போட்டு, எல்லாரும் வடிவாப் போய்வரக்கூடியமாதிரிச் செய்தவை. அப்பிடியிருக்கேக்க ரண்டு வருசத்துக்கு முந்தி அந்த ஒழுங்கையில இருந்த ஒரு வீட்டுக்காரர், 'நாங்கள் வாகனங்களைவிட எண்டு முன்னுக்கு காணியை விட அதை ஒழுங்கையாக்கிப்போட்டினம்' எண்டு போர்க்கொடி தூக்கிச்சினம். அதோட நிக்காமல் அவையின்ர வீட்டு எல்லையா இருக்கிற மதிலையும் தாண்டி, அந்த ஒழுங்கையில இருக்கிற 9 அடி காணியைப் பிடிச்சு, அவ்வளவும் உறுதிப்படி தங்களுக்குச் சொந்தமான காணி எண்டு மதில் கட்ட அத்திபாரமும் கட்டிப்போட்டினம். ஆனால் அந்த அத்திபாரத்துக்கு பிரதேசசபையிட்ட அனுமதியும் எடுக்கேலை. அவை அனுமதி எடுக்காமல் கட்டுகினம் எண்டு அறிஞ்சு பிரதேசசபைக்காரர் அங்க வந்து மதில் கட்டுறதை நிப்பாட்டிப்போட்டினம்.

ஆனால் உண்மையில பூர்வீகமா அந்த ஒழுங்கை மூண்டு அடிப் பாதையாத்தான் இருந்தது. பிறகு அங்கால புதிசா வீடுகள் வர , ஆக்கள் புழக்கமும் கூட, எல்லாரும் வடிவாப்போய் வரவேணுமெண்டு எல்லாக் காணிக்காரரும் தாங்களாவே பாதைக்கு காணியை விட்டுக்குடுத்தவை. அதால உறுதியில மூண்டு அடிப்பாதை எண்டு இருந்தாலும், பாவனையில 12 அடிப்பாதைதான் இருந்தது. அதால உறுதிப்படி அவை மதில் கட்ட வெளிக்கிட்டது சரிதான். ஆனால் பொதுப் பாதையா தார் போட்ட ஒழுங்கையை ஒருத்தருக்கும் சொல்லாமல் பறையாமல், அனுமதியளும் எடுக்காமல் மதில் கட்ட வெளிக்கிட்டதுதான் பிரச்சினையாப் போட்டுது. அதோட அவைக்கு ஏற்கனவே ஒரு மதில் இருக்க, அதைத்தாண்டி 9 அடிக்கு இஞ்சால வந்து, ஒழுங்கையைப் பிடிச்சு மதில் கட்டோணும் எண்ட அவசியமும் இல்லைத் தானே.

இப்ப பட்சி சொல்லவாற பிரச்சினை வேற. இந்த விசயம் சம்பந்தமா பிரதேசசபை வழக்குப் போட்டது. அதில நகர அபிவிருத்தி அதிகாரசபை (யூ.டி.ஏ) இப்பிடி மதில் கட்ட அனுமதி குடுக்க ஏலாது எண்டு ஒரு கடிதம் அனுப்பி இருக்கு. அந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் நீதிமன்றத்தில குடுத்தால், இந்த வழக்கில என்ன தீர்ப்புக் குடுக்கிறது எண்டு நீதிமன்றம் முடிவெடுக்கும். ஆனால் பிரதேசசபைக்காரர் 12.10.2023 இல நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுப்பின அந்தக் கடிதத்தை இன்னும் நீதிமன்றத்துக்கு அனுப்பாமல் இருந்திருக்கினம். இப்ப அந்தப் பிரதேசசபைக்கு புதுச் செயலாளர் வந்திருக்கிறாராம். அவராவது அந்தக் கடிதத்தை நீதிமன்றத்துக்கு அனுப்பி, இந்தப் பிரச்சினை இழுபடாமல் ஒரு முடிவுக்குக் கொண்டுவருவாரோ? எண்டதுதான் அந்த ஒழுங்கையில இருக்கிற ஆக்களின்ர கேள்வி. பாப்பம் என்ன நடக்குதெண்டு.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்களும், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** நண்பர்கள்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப்பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்லதகவல் இன்று வந்துசேரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம்செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள்மூலம் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன்–மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவுசெய்யநேரிடும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பண உதவி செய்வார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் கிடைத்துவிடுவதால் சமாளித்துவிடுவீர்கள்.

# ‘பிளேஓவ்’ வாய்ப்பை இழந்தது ராஜஸ்தான்



**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ராஜஸ்தானைத் தோற்கடித்தது பெங்களூர். இந்தத் தோல்வியின்மூலம் நடப்பு வருடத் தொடரில் பிளேஓவ் வாய்ப்பை இழந்த முதலாவது அணியாக ராஜஸ்தான் மாறியது.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பெங்களூர் அணிக்கு வழக்கம்போல நம்பிக்கையான ஆரம்பத்தை ஆரம்ப வீரர்களான ஷோல்ட் மற்றும் கோலி இருவரும் வழங்கினார்கள். அணி 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஷோல்ட். எனினும், தொடர்ந்தும் நிலையாக ஆடிய கோலி 70 ஓட்டங்களைப் பெற்றார். படிக்கல் 27 பந்துகளில் 50 ஓட்டங்களையும், ரிம் டேவிட் 15 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற 20 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி ஜெய்ஸ்வாலின் அதிரயால் வெற்றிபெறக்கூடிய ஏதுநிலைகளுக்கு அமையவே ஆரம்பத்தில் விளையாடியது. 19 பந்துகளில் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஜெய்ஸ்வால். அதன் பின்னர் நிதிஸ் ராணா, ரியான் பராக் இருவரும் முறையே 28, 22 ஓட்டங்களைப் பெற முதல் 10 ஓவர்கள் 110இற்கும் அதிகமான ஓட்டங்களை ராஜஸ்தான் பெற்றது. எனினும், பெங்களூரின் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆட்டத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இடையிடையே ஓட்டங்கள் எகிறுவதும் விக்கெட்கள் விழுவதுமாக ஆட்டம் நகர்ந்தது. இறுதி இரண்டு ஓவர்களில் 18 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. அச்சுறுத்தலாக இருந்த ஜுரலை வீழ்த்தியதுடன், அந்த ஓவரில் வெறும் ஓர் ஓட்டத்தையே ஹெசில்வூட் விட்டுக்கொடுத்தார். இதுவே ஆட்டத்தின் திருப்பம். முடிவில் 194 ஓட்டங்களையே ராஜஸ்தானால் பெறமுடிந்தது. 11 ஓட்டங்களால் பெங்களூர் வென்றது.

இந்தத் தோல்வி ராஜஸ்தானின் 7ஆவது தோல்வியாகும். 7 தோல்விகளைப் பெறும் அணிக்கு பிளேஓவ் வாய்ப்பு அற்றுப்போகும் என்பதால், பிளேஓவ் வாய்ப்பை இழந்த முதலாவது அணியாக ராஜஸ்தான் மாறியுள்ளது. (ம)




# சீரணி நாகபூசணி ஆலய வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 25

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை 10.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். விழாக்காலத்தில் தினந்தோறும் மு.ப. 11 மணிக்கும் பி.ப 6 மணிக்கும் வசந்த மண்டப் பூஜை இடம்பெறும். அடியார்கள் தம்மால் இயன்ற அபிஷேகப் பொருள்களைத் தந்துதவி, நடைபெறும் வழிபாடுகளில் கலந்துகொண்டு அம்பாளின் அருளாசியைப் பெறுமாறு தர்மகர்த்தா சபையினர் கேட்டுள்ளனர். (ச- 25)

# ஆண்டுவிழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஏப்.25

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், 23 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவுவிழாவும், பரிசளிப்பும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. நிலையத்தின் தலைவர் ம.கஜரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்ஜீவன், கௌரவ விருந்தினர்களாக திருமதி ஐ.பாஸ்கரன், திருமதி வே.செல்வராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது ஆங்கிலவிஷேட வகுப்புகள், புலமைப்பரிசில் பரீட்சை, துடுப்பாட்ட சுற்றுப்போட்டி, சதுரங்க சுற்றுப்போட்டி ஆகியவற்றில் சித்தியடைந்த மற்றும் வெற்றியீட்டிய மாணவர்களுக்குக் கேடயங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தாய்மொழிகளுக்கு உரிய உன்னத ஸ்தானத்தைக் கொடுக்காத எந்தக் கல்வித்திட்டமும் கல்விப் பிரச்சிளையின் விளிம்பைக்கூடத் தொடத்தகுதியற்றதாகும்.

– மகாத்மா காந்தி –


# புதைகுழிகளிலும் இனவாதமா?

செம்மணிப் புதைகுழியில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இரு மாத கால நீண்ட இழுபறியின் பின்னர் அங்கு அகழ்வுகளை மேற்கொள்வதற்கான நிதியை, இப்போதுதான் நிதியமைச்சு விடுவித்திருக்கின்றது என்று அறியமுடிகின்றது. அங்கு மீட்கப்பட்ட மண்டையோடுகள், மனித எலும்பு எச்சங்கள் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் இருக்கும் நிலையில், அங்கு அகழ்வுகளை மேற்கொள்வதில் வேகம் காட்டியிருக்க வேண்டும். ஆனால் இரு மாத கால இழுத்தடிப்புக்குப் பின்னர், அழுத்தங்கள் காரணமாக வேறு வழியில்லை என்ற நிலையிலேயே வேண்டா வெறுப்பாக இந்த அகழ்வுக்கான நிதியை ஒதுக்கியிருக்கின்றது அரசாங்கம்.

வடக்கு, கிழக்கில் இதற்கு முன்னரும் மனிதப் புதைகுழிகளாக இருக்கக்கூடிய பல இடங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழிகள் தொடர்பில் அரசாங்கங்கள் ஒழுங்கான முறையில் விசாரணைகளை மேற்கொள்வதில்லை. மன்னார், திருகோணமலை, கொக்குத்தொடுவாய் போன்ற பல பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழிகளில் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அதற்கு அப்பால் எந்த விடயங்களும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அந்த மனிதப்புதைகுழிகளில் முழுமையாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டனவா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகளில் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் மிகக் குறைந்தளவான நிதியால், அந்த அகழ்வுப்பணிகள் ஓரிரு மாதங்களிலேயே முடங்கிவிடுகின்றன.

*1995, 1996* ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட பலர் செம்மணியில் புதைக்கப்பட்டனர் என்பது ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட விடயம். இவ்வாறு படுகொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்டவர்கள் அப்பாவித் தமிழர்களே. அந்தப் பகுதியில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்படும்போது, அரசாங்கம் இந்த விடயத்தில் தீவிர கவனத்தைச்செலுத்தி உண்மையைக் கண்டறிவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியிருக்க வேண்டும். பட்டலந்த வதைமுகாம் கொலைகளுக்காகக் குரல்கொடுப்போர், அதே தீவிரத்தை செம்மணிப் புதைகுழி விவகாரத்திலும் காட்டியிருக்கவேண்டும். மனிதப்புதைகுழி ஆய்வுக்காக மிகக்குறைந்த தொகையே வேண்டா வெறுப்பாக ஒதுக்கப்படும் நிலையில், அந்த நிதியை ஒதுக்குவதற்கே இரு மாதங்களாக இழுத்தடித்திருப்பது இந்த விடயத்தில் அரசாங்கம் எந்தளவுக்கு ஆர்வம் கொண்டுள்ளது என்பதை புலப்படுத்துகின்றது.

மாற்றம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், கடந்தகாலங்களில் தமிழர் விடயத்தில் தெற்கு கொண்டிருந்த மனப்பாங்கிலிருந்து வெளியேவரவேண்டும். பெருந்தொகையானோர் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்படும் மனிதப்புதைகுழிகள், அங்குள்ளவர்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட ஒருவிடயம். அந்த மனிதப்புதைகுழிகள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்படுவது அங்குள்ள மக்களுக்கு மிக அவசியமான ஒன்று. புதைகுழிகளில் புதைக்கப்பட்டுள்ளவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும், அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். செம்மணி மனிதப்புதைகுழி முதல் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப்புதைகுழிகள் தொடர்பாகவும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ள அரசாங்கம் கதவுகளைத் திறந்துவிட வேண்டும். புதைகுழிகளிலும் இனவாதம் பார்க்கும் போக்கை இந்த அரசாங்கமாவது கைவிடவேண்டும்.




# உப்பு உற்பத்தி பெரும் வீழ்ச்சி

தட்டுப்பாடு ஏற்படலாமென
மன்னார் அரச உப்பு நிறுவனம் தெரிவிப்பு

**மன்னார், ஏப். 25**

**கடந்த ஆண்டின் சீரற்ற காலநிலை காரணமாக உப்பு உற்பத்தி பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்று மன்னார் அரச உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.**

வருடத்துக்கு சராசரி 5 ஆயிரத்துக்கு 500 மெற்றிக்தொன் உப்பை உற்பத்திசெய்யவேண்டும். கடந்த ஆண்டு காலநிலை காரணமாக 2 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் உப்பினையே உற்பத்திசெய்யமுடிந்தது.

அத்துடன் இந்த ஆண்டின் முதற்காலாண்டுக்குரிய உற்பத்தி மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காலநிலையின் தாக்கம் நாடுமுழுவதும் உப்பு உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மன்னார் உப்பளத்தில் ஒரு மாதத்துக்குரிய உப்பே கையிருப்பிலுள்ளது. இந்தநிலை தொடருமானால் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-28)



## சைபர் குற்றங்கள் நாட்டில் உயர்வு!

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 500 சைபர் குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாக இலங்கைக் கணினி அவசர தயார்நிலைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 164 சம்பவங்கள் இணைய மோசடிகளுடன் தொடர்புடையதாகவும் 162 கணக்குகள் ஹேக் செய்யப்பட்டனவாகவும், 291 போலிக்கணக்குகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது சிறுவர்கள் தொடர்பான ஒன்லைன் பாலியல் துஷ்பிர யோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதிகரித்துவரும் டிஜிற்றல் பயன்பாடு சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை ஊக்குவிப்பதில் விரைவான நடவடிக்கையின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது என்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலைக்குழுவின் அதிகாரி தமுனுபொல எச்சரித்துள்ளார். (ச-இ)

## தபால் பொதிகளில் வந்த போதைப்பொருள்கள்!

கொழும்பு, ஏப். 25

வெளிநாடுகளிலிருந்து விமான தபால் சேவைமூலம் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பொதிகளிலிருந்து குஷ் மற்றும் ஹஸிஸ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் சுங்க அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் மொத்தப் பெறுமதி 15 கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பொதிகள் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து விமான தபால்சேவை மூலம் நீர்கொழும்பு, கந்தானை, கணேமுல்ல, மாலம்பே மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள பல முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## மகாபொல புதுப்பிப்பு

மகாபொல கொடுப்பனவு பெறும் பல்கலைக்கழக மாணவர்களின் பட்டியலைப் புதுப்பிக்க கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது. மகாபொல கொடுப்பனவு வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதே இதன் நோக்கம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது . (ச-இ)

## சரியும் ரூபா

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணயமாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 304.16 ரூபாவாகவும், கொள்முதல் விலை 295.50 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 346.90 ரூபாவாகவும், கொள்முதல் பெறுமதி 333.53 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. இதேவேளை, ஸ்டேலிங் பவுண் ஒன்றின் விற்பனை பெறுமதி 405.41 ரூபாவாகவும், கொள்முதல் பெறுமதி 390.97 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)

நாளை
சனிக்கிழமை -சித்திரை 13
26.04.2025
சுப நேரம் : 02.59 - 04.29
ராகுகாலம் : 08.59 - 10.29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடைக்கு குரங்குகள் காரணமல்ல!

## அரசாங்கம் விளக்கம்

கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடைக்கு குரங்குகள் காரணம் அல்ல என மின்சார சபை தெரிவித்துள்ளது.

பாணந்துறை மின்நிலையத்தில் உள்ள மின்மாற்றியொன்றில் குரங்கு ஒன்று பாய்ந்து ஏற்பட்ட மின்கசிவின் காரணமாக குறித்த மின்தடை ஏற்பட்டது என முன்னர் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது. அதன்பிரகாரம் அன்றையதினம் மின்பாவனையாளர்களின் கேள்விக்கு மேலதிகமாக அதிக கொள்ளளவிலான சூரியவலு மின்சக்தியானது தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட அழுத்தமே மின்தடைக்கான காரணம் எனக் கூறப்படுகின்றது. (ச-இ)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

பொதுச்சந்தை, இறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

(03.05.2025 - 31.12.2025)

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தை, இறைச்சிக்கடை 2025ஆம் ஆண்டிற்கு (03.05.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்காக சபையினால் மீள் கேள்வி கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.04.2025 - 02.05.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 02.05.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 02.05.2025 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 02.05.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| புத்தூர் உப அலுவலகம் (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | | | | | |
| 1 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 20,000.00 | 1,133,260.00 |
| 2 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 30,740.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | | | |
| 3 | கோப்பாய் கோழிஇறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | 136,530.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26, 2024.11.23, 2025.04.08 ஆம் திகதிகளில் ,ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.

25.04.2025

(CR/44337) J-1.

# ‘தமிழியல் சுவடுகள்’ நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 25

த.சண்முகசுந்தரத்தின் 'தமிழியல் சுவடுகள்' நூற்றாண்டு விழாக்கால நூல் வெளியீடு, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறவிருந்த அந்த நிகழ்வு, தவிர்க்க முடியாத காரணத்தால் துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்புறமாக உள்ள 'ஹெரிடேச் ஹொட்டலுக்கு' மாற்றப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை பிரதி அதிபர்
தே. பகீரதன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
தேவமணி தேவராசா
இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 27.04.1952 மறைவு 23.04.2025

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி

மரண அறிவித்தல்

சிவநேசன் வசந்தலாதேவி



வேலணை மேற்கு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேசன் வசந்தலாதேவி அவர்கள் 24.04.2025 (வியாழக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா-சந்திராதேவியின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம் கனகம்மா அவர்களின் அன்பு மருமகளும் சிவனேசனின் பாசமிகு மனைவியும், குகனதாஸ், சந்திரதாஸ் (ரொமி), (செல்யா), ஜீவனதாஸ், ஜெயமுனிதேவி, சகிதாதேவி, புஸ்பலாதேவி, கமருபாதேவி, குமுதாதேவி, கேயலா மற்றும் காலஞ்சென்றவர்களான மௌதாஸ், கிருஷ்ணதாஸ், ரகுணதாஸ், குமுததாஸ், குமாரதாஸ், இந்துஷன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கவிதாரணி, சகானா, சௌமியா ஆகியோரின் அன்புத்தாயாரும், நிஸ்புல்லா, இமானுவேல், டினோஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தவராசா, புஸ்பராணி, கலாநிதி, சைலஸ்ரீ, கலையரசி, ஜெயம் ஜெயசீலி, அருந்தவர், சரோஜினி, சிவரஞ்சினி பிறேம்குமார், அருள்நாயகம் (மாமா), ஸ்ரீரஞ்சன், பிரபாகரன், கேதாரநாதன், விநோத்காந், காலஞ்சென்றவர்களான சதாசிவம், செல்வராசா, சிவகுமார், நவநாதன் ஆகியோரின் மைத்துணியும் நவீன்சன், சாமியானி, ஜெனிக்கா, ஷியாம், ஸ்ரீலசியா, ஸ்ரீலக்சன், ஸ்ரீயுகன், விதுர்சிகன், கிதுர்சிகன், டிலான்ஷி, தியாஷ், கத்தரினா ஆகியோரின் பெரியம்மாவும் ஜான்ஷன், ஜென்சிகா, பேபிசன், சுபதீசன், சௌரிஷன், திவானு, யுஜீவன், ஹர்த்திகன், யாசீசன், யதுசன் ஆகியோரின் அத்தையும், சிம்ளா, ஷைம், சாயிரா, பிராங்கியின், தீபிஷா, மோஷித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.04.2025 (வெள்ளிக்கிழமை) காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 10.00 மணியளவில் வேலணை மேற்கு தாளையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 20.11.1970 மறைவு 24.04.2025

தகவல்:
குடும்பத்தினர்

(CR 43060) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் ஆட்சி நாட்டில் இல்லை

## சாடுகின்றார் சஜித்

நாட்டை தற்போது ஆட்சி செய்வது மக்களின் இறையாண்மையோ அல்லது சட்டமோ அல்ல. ரி-56ரக துப்பாக்கி, தோட்டாக்களே நாட்டை ஆட்சி செய்கின்றன. அரசாங்கம் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அகலவத்தையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பாதுகாப்பு இல்லாத நாட்டில் நாம் வாழ்ந்து வருகிறோம். போட்டிக்குக் கொலை செய்யும் கலாசாரம் தலை தூக்கிக் காணப்படுகின்றது. சுதந்திர நாடாக அமைந்து காணப்பட்டாலும், மக்களுக்கு சுதந்திரம் இல்லை. அனைவரும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கொலைக் கலாச்சாரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், அதை இல்லாதொழிக்கவும் இந்த அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை, முதுகெலும்பும் இல்லை. மக்களின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் என்ன தீர்வுகளை வைத்திருக்கின்றனர்-என்றார். (எ-இ)

# கொள்கையில் வழுவாது பயணிக்கும் தமிழ்த் தேசியப் பேரவைக்கு ஆதரவு

## யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அறிவிப்பு




யாழ்ப்பாணம், ஏப். 25

தேசிய மக்கள் சக்தியின் பொறிக்குள் விழாது காலச்சூழலுக்கு ஏற்ப தமிழ் தேசியப் பரப்பில் கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நோக்கில், நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவைக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத் தலைவர் அப்துல் பாசீ ஆசீப் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுடன் யாழ். முஸ்லிம் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும் நட்பும் இருந்துவருகின்றது. அதுமட்டுமல்லாது கொள்கையில் தடுமாறாத நிலையுடன் பயணிக்கும் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி எமது மக்களின் நலன்களில் அதிக அக்கறையுடன் பயணித்துவருகின்றது. காலத்தின் சூழ்நிலைக்கேற்ப கொள்கையுடன் தமிழ்த் தேசியப் பேரவை இருக்கின்றது.

அதனடிப்படையில் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் எமது அமைப்பின் ஆதரவை தமிழ்த் தேசியப் பேரவைக்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம்- என்றார். (ச-20,125,27)

# இலங்கையில் இன்று அபூர்வம்

கொழும்பு, ஏப்.25

3 கோள்கள் ஒரே நேர்கோட்டில் தென்படும் அரியநிகழ்வை இன்று 25ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் சூரிய உதயம் வரை, இலங்கையர்கள் வெற்றுக்கண்களால் பார்க்கமுடியும் என கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பூகோள ஆய்வுப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜனக அடஸ் சூரிய தெரிவித்துள்ளார்.

வெள்ளி, சனி, மற்றும் சந்திரன் ஆகிய மூன்று கோள்களே இவ்வாறு தென்படவுள்ளன. இந்த நிகழ்வை காண்பதற்குத் தெளிவான வானம் கொண்ட திறந்தவெளிகளில் நின்று பார்வையிடுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# விசுவாவசு

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் - 2025




## குதூகலமான ஆண்டு

கும்ப ராசிக்காரர்களுக்கு,

கும்பைப்பூச் சிரிப்பும், தூய்மையான மனதும் கொண்ட நீங்கள், உண்மையை உறக்கச் சொல்பவர்கள். உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் சந்திரன் இருக்கும்போது விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் எதிர்ப்புகளைத் தாண்டிவெல்வீர்கள். வழக்குகள் சாதகமாகும். வற்றிய பணப்பை நிரம்பும். வீட்டுக்குத் தேவையானதை வாங்கிக் குவிப்பீர்கள். அலைபாய்ந்த மனது இனி அமைதியாகும். மனதில் இருந்துவந்த பயம் நீங்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உங்களைக் கண்டும் காணாமல் போன சொந்தம் பந்தங்களெல்லாம் இனி வலியவந்து பேசுவார்கள்.

உடல் ஆரோக்கியம் மேம்படும். பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரமை நீங்கும். தூக்கமின்றித் தவித்தவர்களுக்கு இனி ஆழ்ந்த உறக்கம் வரும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர் யார் என்பதை உணர்வீர்கள். குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்களெல்லாம் நீங்கி இனி மகிழ்ச்சி பொங்கும். அடிக்கடி இன்பச் சுற்றுலா சென்றுவருவீர்கள். சில சந்தர்ப்பங்களில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவீர்கள். யாரிடமும் வெளிப்படையாகப் பேசுவதாக நினைத்து யாரையும் எடுத்தெறிந்து பேசுவதை தவிர்க்கவும்.

மே 14ஆம் திகதி நிகழும் குருப்பெயர்ச்சி நல்லதொரு முன்னேற்றத்தைத் தரும். வீட்டில் மகிழ்ச்சி தங்கும். எதையோ இழந்ததைப் போல் இருந்த உங்கள் முகம் மலரும். அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். சிலருக்கு வீடு, வாங்கும் யோகம் உண்டு. பழைய சொந்த பந்தங்களை வெகு நாட்களுக்குப் பிறகு பார்ப்பீர்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். பார்வைக்கோளாறு, பல் வலி வந்து நீங்கும். காலில் சிறு சிறு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பூர்வீகவீட்டை சீரமைத்து விரிவுபடுத்துவீர்கள். அந்தக் காலம் போல் கூட்டுக் குடும்பமாக இருக்க நினைப்பீர்கள். ஏதோ ஒருவித அமைதியை தேடிச் செல்வீர்கள். குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் மாறும். எப்போதும் அலுத்துக் கொண்ட கணவர் இனி அன்பாகப் பேசுவார். அதேபோல அவ்வப்போது கோபப்படவும் செய்வார். அவற்றைக் கண்டு கொள்ளாதீர்கள். அவரின் வருமானம் உயரும். வியாபாரத்தில் லாபம் உண்டு. ஆண்டு இறுதியில் புதிய முதலீடுகள் செய்வீர்கள். போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் உங்கள் அணுகுமுறையை மாற்றுவீர்கள்.

உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். நிலையற்ற சூழல் மாறி, இனி அதிக சம்பளத்துடன் புது வேலை கிடைக்கும். வெளி மாநிலம், வெளிநாடுகளில் இருந்து புதிய வாய்ப்புகள் தேடிவரும். இழந்த சலுகைகள், பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். மூத்த கலைஞர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள்.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு, முதலில் ஒருவித அழுத்தத்தைக் கொடுத்தாலும் நிறைவில் பெரும் வெற்றியைத் தருவதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எதிர்பார்க்கின்ற ஆட்சியே அவசியமானது

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25



உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கிடைக்கும் பதிலின் அடிப்படையில் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஆட்சியை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்குரிய சூழலை உருவாக்குவதற்கான பொறுப்பை மக்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ட்ரம்ப்பின் வரி அதிகரிப்புத் தொடர்பில் நாடு என்ற ரீதியில் நாம் எவ்வாறான தீர்மானங்களை எடுக்கப்போகின்றோம் என்பது முக்கியமானதாகும். வெறுமனே பேசிக்கொண்டிருக்காமல் நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று சிந்திக்கவேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கிடைக்கும் பதிலின் அடிப்படையில் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஆட்சியை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமெனில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் நாம் இணங்கியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்று அரசாங்கம் சிந்திக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# சுயேச்சைக்குழு - 3 இன் வேட்பாளர்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஏப்.25

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வேலணைப் பிரதேச சபையில் தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் வழிகாட்டலில் சுயேச்சைக்குழு-3 இல் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வேலணையில் நடைபெற்றது. நிகழ்வில் தொழிலதிபர் சுலக்சன் கலந்துகொண்டு, வேலணைப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க தமது சுயேச்சைக் குழுவுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். (ச-41-20)

**நிர்மாண துறையினருக்கோர் அரிய சந்தர்ப்பம்**
**துறை சார் மேம்பாட்டிற்கென வடிவமைக்கப்பட்ட தமிழ், ஆங்கில மொழியிலான புத்தகங்கள்**



"Laws related to Construction Activities with applications in practice"
Author – Eng.S.Ruthiralingam
ரூபா. 2,000.00




"ஒப்பந்த முகாமைத்துவம் (நிர்மாணத்துறை)"
எழுத்தாளர் - பொறியியலாளர்.சி.உருத்தரலிங்கம்
ரூபா. 850.00

**மேற்குறிப்பிட்ட புத்தகங்களினை கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**
**இல.08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**
**(தொலைபேசி இல – 021 222 5534)**
**Quency புத்தகசாலை -**
**இல.271, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**(தொலைபேசி இல – 077 226 8486)**

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 07 . 1947



மறைவு
22 . 04 . 2025

## பிறிற்றோ அன்ரன் பாலேந்திரா (பவளம்)

**முன்னாள் கணக்காளர் (யாழ் ப.நோ.கூ.சங்கம்)**

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் பாலேந்திரா அவர்கள் (22.04.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிறிற்றோ-அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பு மாகிறேற் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணி (ஓய்வுபெற்ற தாதிய விடுதிச் சகோதரி யாழ் போதனா வைத்தியசாலை) அவரின் பாசமிகு கணவரும், நிசாந் (கனடா), கிருஷாந்தி (கொழும்பு), அனோஜா பிரியந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷா (கனடா), அமல்ராஜ் (Merchant Navy Officer), அஜித்குமார் (SLIC-Regional Manager GI-Northern) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிந்தியா மற்றும் விமலேஸ்வரி, யோசப்பின் (நோர்வே), றாஜேஸ்வரி (கொழும்பு), றஞ்சிற் (நோர்வே), யூலியற் (ஓய்வு பெற்ற ஆசிரியை), குளோறியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்தியாப்பிள்ளை (கனடா), துரைரெட்ணம், ஸ்ரனிஸ்லோஸ் (நோர்வே) காலஞ்சென்ற தேவநாயகம் மற்றும் கௌரி (நோர்வே), தனேந்திரன், றோய் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான லில்லி, ஜெயமணி மற்றும் இந்திரா காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் சந்திரா, ராஜகுமாரன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பற்றிக், நீக்கலஸ், அருள்ரெட்ணம் மற்றும் ரெட்ணராஜா, றாஜகுலேந்திரன், சியாமளா ஆகியோரின் சகலனும் ரியா (கனடா), அபிஷா (கொழும்பு), இனோஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக (25.04.2025) வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 972 5864**

(CS 3027) V-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம்

அவர்களின் 31ம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு நாளை (26.04.2025) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (36, மாட்டின் வீதி) நடைபெறும். அன்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நினைவுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலியில் கலந்து கொண்டு அமரர் ஆன் சுமங்கலாவின் ஆன்மா இளைப்பாற்றிற்கான பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**36, மாட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவான் இறங்குதுறை அபிவிருத்தி இந்த ஆண்டுக்குள்

**யாழ்ப்பாணம், ஏப்.25**

**குறிகாட்டுவான் இறங்குதுறை அபிவிருத்திப்பணிகள் இந்த ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், குறிகாட்டுவான் இறங்குதுறை அபிவிருத்தி நடவடிக்கைக்காக 500 மில்லியன் ரூபா அரசாங்கம் ஒதுக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்திருந்தார்.**

இறங்குதுறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக வினவியபோதே வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போதுள்ள இறங்குதுறையை அவ்வாறே வைத்துப் புதிய இறங்குதுறையை அமைப்பதா? அல்லது இருக்கின்ற இறங்குதுறையை இடித்துப் புதிய இறங்குதுறையை அமைப்பதா? என்பது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள இறங்குதுறையின் தற்போதைய நிலை தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது.

இந்தச் செயற்றிட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு வரைவுகள் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை முழுமைசெய்ய 500 மில்லியன் ரூபா தேவைப்படும். இந்த ஆண்டு முடியும் முன்னர் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்படும்-என்றார். (எ-125)

# நெடுந்தாரகைக்கு புதிய நங்கூரம்

யாழ்ப்பாணம், ஏப். 25

நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் கடலுக்குள் காணாமற்போயுள்ள நிலையில் தற்போது புதிய நங்கூரம் கொள்வனவுசெய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் நிலவிய சீரற்ற காலநிலையின் காரணமாக கடற்படையினரால் நெடுந்தாரகைப் படகு நெடுந்தீவில் தரித்து விடப்பட்டது.

இதன்போது அதன் நங்கூரம் கடலுக்குள் அள்ளுண்டு சென்றநிலையில் தேடுதல் பணிகள்தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தநிலையில் 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கண்டியிலிருந்து நங்கூரம் கொள்வனவுசெய்யப்பட்டு நெடுந்தாரகைப் படகுக்குப் பொருத்தப்பட்டுள்ளது. அதற்கமைய நெடுந்தாரகை, வடதாரகை, குமுதினி ஆகிய படகுச்சேவைகள் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25,125)

# இலக்கை அடைவதற்கு கல்வியே ஊன்றுகோல்

## சமுர்த்திப் பணிப்பாளர் சத்தியசோதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.25

கல்வியை இறுகப்பற்றி முன்னேறினால் எந்தவித செல்வாக்கும் சிபாரிசும் இன்றி நீங்கள் உயர்பதவிகளைப் பெறமுடியும் என யாழ்.மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எவ்.சி. சத்தியசோதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிநபராக இன்றி கிராமமாக நாம் முன்னேறவேண்டும். முடியாது என்று ஒரு விடயமும் இல்லை. கல்வியை உங்களது மூலதனமாக இறுக்கிப்பிடிக்கவேண்டும். முயற்சி திருவினையாக்கும். இலங்கையிலே சிறப்பாகக் கல்விகற்பதன் மூலம் நீங்கள் மிக உயர்ந்த பதவியை எந்தவித சிபாரிசும் செல்வாக்கும் இன்றி பெற்றுக்கொள்ளமுடியும். அரசாங்கம் உங்களுக்கு இலவசக்கல்வியை வழங்குகின்றது. கல்வி மாத்திரமே எமது சிறந்த ஆயுதம். மாணவர்களாகிய நீங்கள் கல்விகற்று நிரந்தரத் தொழில் ஒன்றுக்குச் செல்லும்பொழுது நீங்கள் கற்ற கல்வியின் பயனை அடைவீர்கள் - என்றார். (ச-22,125)

# கொளுத்தும் வெயிலால் தானியச்செய்கை பாதிப்பு!


யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்.குடாநாட்டில் நிலவும் அதிகரித்த வெப்பநிலை காரணமாக சிறுதானியப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் கிணறுகள் மற்றும் குளங்களை அண்டி பயிரிடப்பட்ட பயிர்களுக்கு செய்கையாளர்கள் நீர் இறைத்து பயிர்களைக் காப்பாற்றிவருகின்றனர். மழை பெய்யாவிடின் சிறுதானியப்பயிர்கள் முற்றாக அழிந்துபோகலாம் என்றும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-25, 17)

# மரண அறிவித்தல்

தோற்றம்
31
12
1946



மறைவு
24
04
2025

## சூசைப்பிள்ளை மதுரநாயகம்

உடுவில் மல்வத்தைப் பிறப்பிடமாகவும், யாழ் மடம் வீதி மற்றும் மருதடி வீதி ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மதுரநாயகம் (24.04.2025) நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-பரிபூரணம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா-தங்கமணியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரிபிலோமினாவின் அன்புக் கணவரும் டன்ஸ்ரன், டன்ஸ்ரலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் றோசறி சார்மினியின் அன்பு மாமனாரும் பொன்பிலியா, கபிறியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அருளப்பு, தங்கமணி ராணி, யோவான், மற்றும் தாவீது, தேவமலர் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற விஜயகுமாரன் மற்றும் மகேஸ்வரன் கேமா, குயின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 25/4/2025 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு 16/1A, மருதடி வீதி, 2ம் ஒழுங்கை நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரிசுத்த மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலயில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொளுயுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

16/1A, மருதடி வீதி
2ம் ஒழுங்கை நல்லூர்
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.
077 644 5999

(CS 3026) V-1

# 'யாருக்காக அழுதான்?' திரைப்படம் ஞாயிறன்று செல்வா கலையரங்கில்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். திரைப்படக்கழகத்தின் ஏற்பாட்டில், 1966 இல் வெளிவந்திருந்த நெறியாளர் ஜெயகாந்தனின் "யாருக்காக அழுதான்?" திரைப்படம், யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

எழுத்தாளர் ஜெயகாந்தனின் குறுநாவலே யதார்த்தத் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது.

இலவசமாக காண்பிக்கப்படவுள்ள இந்தத் திரைப்படத்தை ஆர்வலர்களைக் கண்டு களிக்குமாறு கழகத்தினர் கேட்டுள்ளனர். (ச-25)



யாழ்ப்பாணம் தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் ஆலய விளையாட்டு விழா கடந்த திங்கட்கிழமை மைதானத்தில் இடம்பெற்றது. (ச-41-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் அரசியல் செய்யவேண்டாம்!

## அரசாங்கத்துக்கு ஞானசாரதேரர் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.25

**அரசாங்கம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அரசியல்மயப்படுத்தக்கூடாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அரசியல்மயப்படுத்தினால் அது உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்கு உதவலாம் என பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 11ஆம் திகதி, உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் சூத்திரதாரி குறித்த விவரங்களை வெளியிடுவேன் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரியைக் கண்டுபிடிப்பதாக பல மேடைகளில் ஜனாதிபதி வாக்குறுதியளித்தபோதிலும், இதுவரை அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அரசியல் மயப்படுத்தக்கூடாது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அரசியல்மயப்படுத்தினால் அது உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்கு உதவலாம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களிற்கு உண்மையான நீதியை வழங்கவேண்டும் என்றால் நாட்டில் புற்றுநோய் போன்று பரவிவரும் இஸ்லாமிய தீவிரவாத சக்திகளை முற்றாகத் தோற்கடிக்கவேண்டும் - என்றார். (ச-இ)

# சொந்தக்காசில் சூனியம் தமிழ் மக்களே உஷார்!

## சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 25

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து சிங்கள மேலாதிக்கத்தை ஆதரிப்பது தமிழ் மக்கள் தங்களுடைய சொந்தக்காசில் சூனியம் வைத்துக் கொண்டதற்கு நிகராகிவிடும். எனவே நாம் விழிப்புடன் செயலாற்றவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியில் சங்குச் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த உள்ளூராட்சித் தேர்தல் மிக முக்கியமான காலகட்டத்தில் இடம்பெறுகிறது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே உள்ளூர் அதிகாரங்கள் அந்தந்த உள்ளூர் தரப்பினர்களிடமே இருக்கவேண்டும். அதிகாரப்பகிர்வுக்காக போராடிய அதற்காக பல தியாகங்களைச் செய்த இனம் நாங்கள். அந்தத் தியாகங்களுக்கு ஈடாக தீர்வுகள் இதுவரை கிடைக்காதபோதிலும் கிடைத்த இந்த உள்ளூர் அதிகாரத்தையாவது நாம் தொடர்ந்தும் எங்களுக்குள் வைத்திருக்கவேண்டும். அதுவே தமிழ் இனத்தின் எதிர்கால அரசியல் உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நகர்வுகளுக்கு பலம் சேர்க்கும். எனவே தமிழ் மக்கள் மீண்டும் தேசிய மக்கள் சக்தியின் அலைக்குள் சிக்குண்டால் ஒருபோதும் கரைசேரமுடியாதுபோய்விடும் - என்றார். (ச-28.214)

# ஆக்கங்கள் கோரல்

வடமாகாண கல்வி, விளையாட்டு, பண்பாடு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகினால் வெளியிடப்படவுள்ள 2025 ஆம் ஆண்டு 'ஈழத்து கும்மிப்பாடல் தொகுப்பு' எனும் நூலுக்காக ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களைப் பிரதி பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் அலகு, கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்குத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது npc.culture@yahoo.com. எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ அடுத்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சேர்ப்பிக்கவேண்டும். மேலதிக தகவல்களை 0212054105 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



# மறைந்த பாப்பரசருக்கு வவுனியாவில் அஞ்சலி!

வவுனியா, ஏப்.25

பாப்பரசர் போப்பிரான்சிஸுக்கு வவுனியா தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் அண்மையில் அஞ்சலிசெலுத்தப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் போப்பிரான்ஸ்சிஸ் வத்திகானில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வவுனியா தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் அஞ்சலிசெலுத்தப்பட்டது. தொடர்போராட்டம் மேற்கொண்டுவரும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது திருவுருவப்படத்துக்கு ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-110)

# சமத்துவம் பேணியவர் திருத்தந்தை பிரான்சிஸ்



## யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.25

திருத்தந்தை பிரான்சிஸ் இந்த உலகைவிட்டுச் சென்றாலும், எதிர்காலத் திருச்சபை எப்படி இருக்கவேண்டும் என தனது வாழ்வினாலும் போதனையாலும், தெளிவாகச் சொல்லித்தந்து சென்றிருக்கிறார். இறைவனடி சேர்ந்த பரிசுத்த பாப்பரசர் கத்தோலிக்கர்களுக்கான தலைவராக மட்டுமல்லாமல் முழு உலகத்தவர்களுக்குமான திருத்தந்தையாக விளங்குகிறார் என்று யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர், அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த அவர் தென்னமெரிக்க நாட்டின் முதலாவது திருத்தந்தையாக தெரிவுசெய்யப்பட்டார். தனது பணிவாழ்வை அவர் வித்தியாசமான விதத்தில் ஆற்றினார்.

மிகவும் ஆடம்பரமான ஒரு கார் அவருக்காக ஏற்பாடுசெய்யப்பட்டபோதும் அவர் அதனைப் பெறமறுத்து வத்திக்கானில் சாமானியன் ஒருவரால் பாவிக்கப்படக்கூடிய காரையே தனது பாவனைக்காகப் பெற்றுக்கொண்டார்.

இவை வெறுமனே அவர் திருத்தந்தையாக இருந்தபோது செய்த செயல்கள் அல்ல. மாறாக கடந்த 12 ஆண்டுகளும் அவர் ஓர் எளிமையான வாழ்வையே வாழ்ந்தார். தனது பணிவாழ்வில் அவர் பெண்களுக்கு சமத்துவம் கொடுத்தார். திருச்சபையின் கறைகள் கழுவப்படவேண்டும், திருச்சபைக்குள் எல்லோரும் உள்வாங்கப்பட்டு இறைவனின் இரக்கத்தைப் பெறவேண்டும், திருச்சபையில் வெளிப்படைத்தன்மை இருக்கவேண்டும், பொதுநிலையினரும் திருச்சபையில் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பனவே அவரின் கருத்துகளாக இருந்தன.

"சமாதானம் சாத்தியமானது" என்பதே திருத்தந்தை பிரான்சிஸ் சொன்ன கடைசி செய்தியாக இருக்கிறது - என்றார். (ச-[illegible])

# அலைக்கழித்தால் தண்டிக்கப்படுவர்

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

வடக்கின் ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றங்களும் மக்களை அலைக்கழிப்பதை நிறுத்தாவிடின் எதிர்காலத்தில் மக்களின் முறைப்பாடுகளுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்து தண்டனையை வழங்கப்படும் என்று வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா. வேதநாயகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான ஏப்ரல் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய ஆட்சிக்காலங்களில் எமது மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு முன்வந்த பலர் பல்வேறு காரணங்களால், குறிப்பாக இலஞ்சம் கோரியமையால் திரும்பிச்சென்றனர். அவர்கள் இப்போதும் மீண்டும் வருகின்றனர். அவர்களுக்குரிய ஒழுங்குகளை நேரிய சிந்தனையுடன் அதிகாரிகள் செய்துகொடுக்கவேண்டும், சட்டவிரோதக் கட்டடங்களுக்கு எதிராக உள்ளூராட்சிமன்றங்களின் செயலர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காண்பிக்கும் நிலைமை காணப்படுகிறது.

வடக்கின் ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றங்களும் கட்ட அனுமதி, ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை வழங்குவதிலுள்ள தாமதத்தை களையவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்- என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டக்ளஸ்...

எவரையும் பாரபட்சம் பார்க்கமாட்டோம். அனைத்து விடயங்களையும் விசாரிப்போம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதே உண்மையான அரசியல். உங்களுக்குத் தெரியும் இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் அதிகாரம் படைத்த சிலருக்கு விதிவிலக்காக இருந்தன. அது சாதாரண மக்களுக்காகவே இருந்தது. ஆனால், இன்று அந்த நிலை இல்லை. அனைத்தையும் மாற்றியுள்ளோம். உங்களின் வாக்குகளால் அனைத்து விடயங்களும் மாற்றப்பட்டுள்ளன. இலஞ்சத்திலும் ஊழலிலும் ஈடுபட்ட பெரும் பணமுதலைகளைப் பிடித்து, அவர்களைத் தண்டிக்கும் வேலைத்திட்டங்கள் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னொரு காலத்தில், அமைச்சர்களைக் கண்டு பொலிஸார் ஓடியொளிந்தார்கள். இன்று பொலிஸாருக்குப் பயந்து அமைச்சர்கள் ஓடியொளிகின்றனர்.

**ராஜபக்சவே பெரிய முதலை**

'வடமாகாணத்தில் இருக்கின்ற கள்வர்களை நீங்கள் பிடிக்கமாட்டீர்களா? என்று கிளிநொச்சியில் வைத்து ஒருவர் என்னிடம் கேட்டார். நிச்சயமாகப் பிடிப்போம். கள்வர்களைப் பிடிப்பதில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற வேறுபாடு எமக்கில்லை. இங்கும் மன்னாரில் இருந்து புத்தளத்துக்குச் சொப்பிங் பையுடன் வந்தவர்கள் இருக்கின்றனர். இப்போது அவர்களது சொத்துகள் மூலம் பத்து கப்பல்களை வாங்கமுடியும். டக்ளஸ் எல்லா அரசாங்கத்திலும் அமைச்சராக இருந்தார்.
நாங்கள் யாரையும் பாரபட்சம் பார்க்கமாட்டோம். பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். பெரிய முதலைகள் கொழும்பிலேதான் இருக்கிறார்கள். ராஜபக்ச மிகப்பெரிய முதலை. நாமல், யோஷித ஆகியோருக்கு எதிராகப் பொதுமக்களின் பணத்தை சூறையாடியதற்காக வழக்குகள் பதிவுசெய்துள்ளோம். எனவே உங்கள் வாக்குகள் மூலம் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்று பெருமைகொள்ளுங்கள். நாட்டின் பாதாளக் குழுக்களை உருவாக்கியது ராஜபக்சக்களும், விக்கிரமசிங்கக்களும், பிரேமதாஸக்களுமே.

**பொட்டுவைத்தாலும் சோதனை**

முன்பு சோதனைச் சாவடிகளில் பெண்கள் பொட்டு வைத்துச்சென்றால் இருமுறை சோதனை செய்வார்கள். பொட்டு இல்லாவிடில் ஒருதரம் சோதனை செய்வார்கள், முஸ்லிம் மக்கள் என்றால் மூன்றுதரம் சோதனை செய்வார்கள், அதை மாற்றும் செயற்பாட்டை நாம் முன்னெடுத்துள்ளோம். நாங்கள் இந்த அரசை பொறுப்பெடுத்து 5 மாதங்களே ஆகின்றது. ஓட்டோவை வேகமாகத் திருப்பலாம் பேருந்தையும் கப்பலையும் வேகமாகத் திருப்புவது கடினமே. பிழையான வழியில் சென்ற தேசத்தையே திருப்ப நாம் முற்பட்டுள்ளோம். உங்களுக்கும் எனக்கும் கிடைத்தது சொர்க்கமான பூமி அல்ல. வங்குரோத்தான ஒரு நாடு. ரணில் இந்த நாட்டை ஆண்டபோது டொலரின் பெறுமதி காலை ஒரு விலையிலும் மாலை ஒரு விலையிலும் இருந்தது. இன்று அதில் ஒரு உறுதித்தன்மை காணப்படுகின்றது. உங்கள் பொருளாதார பிரச்சினைகள் தீர்வதற்குக் கொஞ்சக்காலம் எடுக்கும். ஆனால், நிச்சயம் தீர்த்துவைப்போம்.
கம்பன்பில ராஜபக்சவின் 'கோளையாள்' தெற்கின் கம்மன்பில போன்றோர் வடக்கிலும் உள்ளனர். அரசியல் அநாதைகளாக அவர்கள் மாறியுள்ளனர். அவர்கள் இனவாதத்தை விதைக்கிறார்கள். ஈஸ்ரர் தாக்குதலில் சந்தேகத்தின் பெயரில்தான் பிள்ளையானைக் கைதுசெய்திருக்கிறோம். அவரைக் கைதுசெய்தவுடன் அவருடன் தொலைபேசி அழைப்பில் கதைக்கவேண்டும் என முதலாவதாக முற்பட்டவர் யார் என்று தெரியுமா? பிள்ளையானின் மனைவி அல்ல. ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் இருவரும் நண்பர்களா? ஒருபோதும் இல்லை. கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக ஏன் மாறுகிறார்? அவர் ராயபக்சவின் 'கோளையாள்'. உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிய விசாரணை நடத்தப்படும்போது ராஜபக்ச, ரணில், சஜித் அனைவரும் குழப்பம் அடைந்துள்ளனர். நாட்டை வளப்படுத்த முற்படும்போது கள்வர்கள் குழப்பமடைந்துள்ளனர். (அ-ம-110)

## வீட்டுக்குள்...

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யுவதியொருவரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு வேளையில் அத்துமீறி நுழைந்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் குறித்த யுவதியால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்ற உத்தர்வுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை அடையாள அணிவகுப்புக்கு அவர் உட்படுத்தப்படவுள்ளார்.
(அ-ம-26-125)

## இலங்கையில்...

நாளை இடம்பெறவுள்ளன. இதைமுன்னிட்டே அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இலங்கையில் தேசியத் துக்கதினம் கடைப்பிடிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.
பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று மாலை இலங்கையில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்றார். அங்குள்ள இரங்கற்குறிப்பில், இலங்கையின் சார்பாக தனது அஞ்சலிக் குறிப்பைப் பதிவுசெய்த அவர், வத்திக்கானின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பிரையன் உடைக்வே ஆண்டகையுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (அ-ம-இ)

## பொலிஸ்...

முன்வைத்துள்ளார். இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகிய தரப்புகளிடம் அந்தப் பெண் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார்.
முறைப்பாட்டாளரான குறித்த பெண், மோசடி வழக்கில் கைதுசெய்யப்பட்டு தற்போதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நிமோனியாவால்...

பகுதியைச் சேர்ந்த, அப்புத்துரை கருணாகரன் (வயது-57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
காய்ச்சல் காரணமாக அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் கடந்த 21ஆம் திகதி சிகிச்சைபெற்ற அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.
மருத்துவப் பரிசோதனையில், நிமோனியா காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## வடமாகாணத்தை...

தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கை வளப்படுத்த எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். பலாலி விமானநிலையத்தை விருத்திசெய்வோம். அங்கு கொழும்பில் இருந்து ஆட்களை வேலைக்கு அமர்த்த நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கைத்தொழில் பேட்டைகள் உருவாக்குவோம். அதன் பிறகு, 'கனடாவுக்குச் சென்று பனியில் துன்பப்படும் நிலைமாறிவிட்டது' என்று உங்களது உறவுகளுக்கு சொல்லுங்கள்.
நான்கு மாதத்தில் ஓர் அப்பக்கடையைப் போடுவதே கடினம். ஆனால், நாங்கள் ஆனையிறவு உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம். அதனைத் தொடங்கிய பின்னர் சுமந்திரனுக்கு அது பிரச்சினையாக உள்ளது. உப்பு பக்கற்றில் பெயர் பிழையாம். உப்பிலே நீங்கள் பாப்பது பெயரையா? ருசியையா? இவ்வாறான சின்ன விடயங்களுக்காக இனவாதத்தை தூண்டும் ராஜபக்ச சகோதரர்கள் வடக்கில் உள்ளனர் - என்றார்.
பெயர்மாற்றம் தொடர்பில் வெளிவந்த தொடர்ச்சியான எதிர்ப்புகளைத் தொடர்ந்து, 'ரஜ உப்பு' என்று கடந்த அரசாங்கமே பெயர்மாற்றம் செய்தது என்றும், விரைவில் அந்தப் பெயர் ஆனையிறவு உப்பு என்று முன்னைய பெயருக்கே மாற்றம் செய்யப்படும் என்றும் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## டான்...

திகதி இரவு டான் பிரியசாத் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. மறுநாள் காலையில் அவர் உயிரிழந்தார். இந்தப் படுகொலை தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே, பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த வழக்கில் இரண்டு பெண்கள் உட்பட சிலர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தேசிய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியைத் தடுக்கவேண்டும் என்றும், அதனால் தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களியுங்கள் என்றும் இன்று பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையில் இன்றுள்ள மிகப்பெரும் கட்சியென்றால் அது தேசிய மக்கள் சக்திதான். வன்னி, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களில் உள்ள மிகப்பெரிய தமிழ்கட்சி தேசிய மக்கள் சக்தியே.
சுமந்திரனுக்கு இம்முறை போதிய வாக்குகள்யாழ்ப்பாணத்தில்கிடைக்கவில்லை. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர்கூட யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லை. சிறீதரன்கூட கட்சியின் வாக்குகளால் வரவில்லை. அவர், கிளிநொச்சியில் உள்ள தனது தனிப்பட்ட வாக்குகளால்தான் வந்தார். அந்த வகையில், இலங்கையின் மிகப்பெரும் தமிழ்க்கட்சி நாங்கள்தான். அதுமட்டுமல்ல, இலங்கையின் மிகப்பெரிய முஸ்லிம் கட்சியும் தேசிய மக்கள் சக்திதான். மிகப்பெரும் சிங்களக் கட்சியும் தேசியக் கட்சியும் தேசிய மக்கள் சக்திதான் - என்றார். (அ-ம-110)

## செம்மணிப்...

புடைய விடயங்கள் புனரமைக்கப்படும் என்று தமிழ்தேசியப் பேரவை தெரிவித்துள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தமிழ்த்தேசியப் பேரவை யாழ்.மாநகர சபைக்கான முன்மொழிவுகளை உள்ளிடக்கிய செயற்றிட்ட ஆவணத்தை நேற்று வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டது. அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், ந.ஸ்ரீகாந்தா ஆகியோரும் முன்னாள் வடமாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், தென்மராட்சி சிவில் சமூகச் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், வேலணைப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் க.நாவலன், யாழ். மாநகரசபை வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.
(அ-ம-26-66)

## தவறான...

உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இறப்புக்கான காரணம் தொடர்பில் இன்னமும் உத்தியோக பூர்வமான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (அ-ம-26)

## மருத்துவரிடம்...

ளது. கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகளை ஆராய்ந்த பொலிஸார், மருத்துவமனையின் பணியாளர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை வளையத்துக்குள் எடுத்துள்ளனர். விசாரணைகளைத் தொடர்ந்து, அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.
(அ-ம-26)

## ஹைஏஸில்...

முச்சக்கரவண்டி அதே திசையில் பயணித்த சாரதி பயிற்சிப் பாடசாலையின் ஹைஏஸ் ரக வாகனத்தின் பின்புறமாக மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.
*(கடந்த 23 ஆம் திகதி 3 ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் ஹைஏஸ் வாகனம் முச்சக்கரவண்டியை மோதி விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் முச்சக்கரவண்டியே ஹைஏஸ் வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தியது என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். செய்தியில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## உடனடி வேலை வாய்ப்பு

**உபவிடுதிக் காப்பாளர் (ஆண், பெண்)**

எமது சங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் சிறுவர் இல்லங்களான உரும்பிராய் கருணை இல்லம் (பெண்கள்), திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லம் (ஆண்கள்) ஆகியவற்றில் உபவிடுதிக் காப்பாளர் பணிக்காகத் தகுதி வாய்ந்த ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை 25 -55
- கல்வித் தகைமை க.பொ.த சா/தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தியுடன் அல்லது அதற்கு மேற்பட்டது
- உணவு, தங்குமிடமும் வழங்கப்படும்.
- ஆண்கள் இல்லத்திற்கு ஆண்களும் பெண்கள் இல்லத்திற்கு பெண்களும் நியமிக்கப்படுவர்
- சம்பளம் ஊக்குவிப்பு தொகை உள்ளடங்கலாக, ரூபா 40,000.00 வரை
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டியிருக்கும்
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்.
- துறை சார்ந்த கல்வி / அனுபவம் உடையவர்கள் முன்னுரிமை பெறுவர்
- கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்

**சாரதி ஆண்**

- வயதெல்லை 35 - 55
- கல்வித் தகைமை க.பொ.த சா/தரம் அல்லது அதற்கு மேல்
- சம்பளம் ஊக்குவிப்பு தொகை உள்ளடங்கலாக ரூபா 40,000.00 வரை
- கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்

சுய விபரக்கோவையினை 07.05.2025 இற்கு முன்பதாக தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி - 021 222 6525, 076 300 4877**

**த.தவரூபன்**
**செயலாளர்**

பகல்ஹாம் தாக்குதலின் எதிரொலி

# இந்தியா பாகிஸ்தான் இடையே உச்சம் பெற்றது போர்ப் பதற்றம்!

**புதுடில்லி, ஏப். 25**

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நேரடி மோதல் வெடிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்ட 'பகல்ஹாம்' பகுதியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில், சர்வதேச சுற்றுலாவிகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர். இதற்கெதிராக இந்தியா கடும் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

நேற்று மாலை ஏவுகணைச் சோதனையையும் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சோதனை பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பயங்கரவாத முகாம்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்டது என்று கூறப்படுகின்றது. அத்துடன், தாக்குதல் தொடர்பில் பிரதமர் மோடி நேற்று மாலை விசேட உரையாற்றியுள்ளார். அந்த உரையில், 'பயங்கரவாதிகள் எங்கிருந்தாலும், அது இன்னொரு நாடாக இருந்தாலும் புகுந்து வேட்டையாடுவோம். இது தெற்காசியாவில் இருந்து பயங்கரவாதத்தை முற்றாக அழிக்கும் நடவடிக்கையின் ஆரம்பப்புள்ளியாக இருக்கும்' என்று அறிவித்துள்ளார்.

அத்துடன், பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் சிந்து நதிநீர் பங்கீட்டை ஒரு இராணுவ நடவடிக்கை என்றும் போர் நடவடிக்கை போன்றும் பார்ப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பும் கூறியுள்ளார்.

எல்லையில் இராணுவத்தைக் குவிக்கும் நடவடிக்கையில் இரண்டு நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன. ஆதலால், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நேரடி மோதல் மிக விரைவில் வெடிக்கலாம் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 05 . 1946

மறைவு
23 . 04 . 2025

### கனகசுந்தரியம்மா கணேசமூர்த்தி
**( இளைப்பாறிய அதிபர் )**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அம்பலவாணர் வீதி அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரியம்மா கணேசமூர்த்தி அவர்கள் நேற்றுமுன்தினம் (23.04.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் செங்கமலம் தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா மனோன்மணி தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற கணேசமூர்த்தியின் (இளைப்பாறிய அதிபர் வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி) அன்பு மனைவியும், Dr. ஸ்ரீதரன் (surgical oncologist teaching hospital jaffna) அவர்களின் அருமைத் தாயாரும், கிருஷ்ணவேணியின் (Managing partner-Manoharan & Vettivel) அன்பு மாமியாரும், வேனிலனின் (மாணவன் St.John's college) பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மகாதேவனின் அன்புச் சகோதரியும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக அத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (25.04.2025) வெள்ளிக்கிழமை 3.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
Dr.G **ஸ்ரீதரன் - மகன்**
**077 725 1024, 077 133 7894**

**இல. 49, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்** (CS/58077)



## தபால்மூல வாக்களிப்பு வவுனியாவில் சுமுகம்

மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பமானது. வவுனியா மாவட்டத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது. வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், ஆசிரியர்கள் ஆகியோர் நேற்று வாக்களித்தனர். (எ-110)

## பணிநிலை வேண்டுகை




**யாழ் நகரில் இயங்கும் உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவை**

1) **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)**
   **(வாகன சாரதி அனுமதி பத்திரமுடையவர்கள்)**
2) **பக்க வடிவமைப்பாளர்கள் (Graphic Designer)**
   **(ஆண், பெண் இருபாலாரும் - பகல்/இரவு)**
3) **வரவேற்பாளர்கள் - (ஆண், பெண் இருபாலாரும்)**

**ஆர்வமுள்ளவர்கள் 25.04.2025 - வெள்ளிக்கிழமை மற்றும் 26.04.2025 - சனிக்கிழமை ஆகிய திகதிகளில் நேர்முகத்தேர்வுக்கு நேரில் சமூகமளிக்கவும்.**

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org